**சென்றல் எஞ்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் கம்பனி - 2016**

---

சென்றல் எஞ்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

சென்றல் எஞ்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட் கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகளின் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வங்கியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் நான் பெற்றிருக்கின்றேன்.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் வங்கியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

  நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 117,612,550 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 110,224,038 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தது. ஆகையினால், நிதிசார் விளைவுகளில் ரூபா 7,388,512 பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது நிர்வாகச் செலவினம் ரூபா 180,059,936 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் இந்தப் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் வருமான இனங்காணல் கூற்றின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினால் (சீஈசீபீ)

கம்பனிக்கு ரூபா 8,697,350,179 பெறுமதியான 683 நிர்மாண ஒப்பந்தங்களுக்கான உப-ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் 639 உப-ஒப்பந்த உடன்படிக்கைகள் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,397,469 பெறுமதியான 44 உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 72 முழுமையாக பூர்த்தியாக்கப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களிலிருந்து பெறப்பட்ட வருமானத்தினை விட செலவினம் மிகைத்தமை காரணமாக மீளாய்வாண்டின் போது தென், பத்தரமுல்லை, அனுராதபுரம், ஊவா, ஜாவத்த, மத்திய மாகாணம் மற்றும் பொலனறுவை போன்ற தள அலுவலகங்களினால் ரூபா 369,988,706 நட்டமொன்று தாங்கிக்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களினை முன்னிலைப்படுத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்கு வருடாந்த கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி மூன்று மாதங்கள் கால தாமதத்தின் பின்னர் 2016 யூன் 14 இல் மாத்திரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்திருந்தது. அதனைத்தொடர்ந்து திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 06 இல் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பெறுகைகள் முகாமைத்துவம்

பெறுகைகள் வழிகாட்டல்களின் 6.2 மற்றும் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம், தேசிய கடை முறைமையின் கீழ் விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களினை சமர்ப்பிப்பதற்கு குறைந்தது ஏழு நாட்கள் அளிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 11,119,333 பெறுமதியான பெறுகைகள் தொடர்பில் விலைமனுக்களினை சமர்ப்பிப்பதற்கு ஜாவத்த செயற்திட்டம் மற்றும் பத்தரமுல்லையின் ஏனைய 05 செயற்திட்டங்கள் போன்ற தள அலுவலகங்களுக்கு ஒன்று தொடக்கம் மூன்று நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து உறுதிப்படுத்தல்களினைப் பெற்றுக்கொள்ளாது நான்கு வருடங்களுக்கு மேலாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்ந்தும் காணப்படுகின்றமை. |
| (ஆ) | சரக்கிருப்புக் கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம் | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான தளங்களிலுள்ள சரக்கிருப்பு, வகைகள் மற்றும் இருப்புக்கள் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | விலைப்பட்டியலிடல் | நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பிலான செய்து முடிக்கப்பட்ட உண்மை வேலை நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |